# மின்சார வாகனங்கள்

## மின்சார வாகனங்கள் என்பன யாவை?

- மின்சார வாகனங்கள் என்பவை மின் மோட்டார்களை பயன்படுத்தி இயங்கக் கூடிய வாகனங்கள் ஆகும்
- இந்த வாகனங்கள் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மின்சாரத்தை பயன்படுத்தி இயங்கக் கூடியவை
- வாகனம் இயங்குவதற்குத் தேவையான மின்சாரம், இவற்றில் பொருத்தப்பட்டுள்ள பேட்டரிகளில் சேமிக்கப்படும்
- வாகனங்களை வீடு, பணியிடம் போன்ற இடங்களில் பொருத்தப்பட்ட தனி சார்ஜிங் ஸ்டேஷன்கள் (private charging stations) அல்லது பொது சார்ஜிங் ஸ்டேஷன்களில் (public charging stations) சார்ஜ் செய்து கொள்ளலாம்

## மின்சார வாகனங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

- மின்சார வாகனங்கள் வாகனப்புகையை வெளியிடுவதில்லை அல்லது குறைவாக வெளியிடும் இதனால், வாகனம் இயங்கும் பகுதிகளில் காற்று மாசுபாடு குறையும்
- பொதுவாக பெட்ரோலிய எரிபொருட்களில் இயங்கக்கூடிய வாகனங்களை ஒப்பிடும்போது, இவற்றை இயக்கும் மற்றும் பராமரிக்கும் செலவு குறைவு
- இவற்றில் இருந்து சத்தம் வெளிவருவதில்லை. எனவே, ஒலி மாசுபடுதலைத் தவிர்க்கலாம்



**சிட்டிசன் கன்ஸ்யூமர் அண்டு சிவிக் ஆக்ஷன் குரூப் (சி.ஏ.ஜி.)**

புதிய எண் 246, பழைய எண் 277-B, டி.டி.கே ரோடு, (ஜெ.ஜெ. ரோடு), ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

தொலைபேசி 91-44-2466 0387/2499 4458